(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 96.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2016 செப்தெம்பர் 06, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

456/ ’16

1.

கௌரவ எம்.எச்.எம் சல்மான்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹிங்குரக்கொட பிரதேச சபையினால், குப்பை கூளங்களை அப்புறப்படுத்தும் இடமாக இனங்காணப்பட்டுள்ள ரொட்டவெவ, பொல்வத்த காணி அசுத்தமடைந்து அதன் நீர் மூலங்களுக்கு சேதமேற்படக்கூடிய ஆபத்தான நிலைமை நிலவுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) குடிநீர் பிரச்சினையும் சிறுநீரக நோய் நிலைமையும் தீவிரமடைந்துள்ள மேற்படி பிரதேச மக்களுக்கு இதன் மூலம் ஏற்படுகின்ற தாக்கத்தை குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) சுற்றுச்சூழலுக்கு பாதிப்பேற்படாத வகையில் முறைசார்ந்ததாக கழிவகற்றல் திட்டமொன்றை ஆரம்பிப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

464/ ’ 16

2.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) 2016 சனவரி 01 திகதியில் உள்ளவாறு சனாதிபதியினால் அவரது பணியாட் தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள சகல ஆலோசகர்கள், செயலாளர்கள், ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள், பிரத்தியேக உதவியாளர்கள் மற்றும் வேறு இவ்வாறான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி (i) இற்கு அமைவாக மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் வழங்கப்படும் சம்பளம், கொடுப்பனவுகள், பணியாட்டொகுதி மற்றும் ஏனைய வசதிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

479/ '16

3.

கௌரவ கனக ஹேரத்,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டில்,

(i) இலங்கையர்களால் நுகரப்பட்ட சீனியின் அளவு எத்தனை மெற்றிக் தொன்கள் என்பதையும்;

(ii) நுகர்வு செய்யப்பட்ட சீனியில் இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட சீனித் தொகையின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) உள்நாட்டு சீனித் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட சீனியின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு சீனித் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட சீனியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2015 ஆம் ஆண்டில் சீனி உற்பத்தியில் அதிகரிப்பொன்று ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

598/ '16

4.

கௌரவ லக்கீ ஜயவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) முதலாந் தரத்திலிருந்து உயர் தரம் வரை கல்வியை போதிக்கின்ற இலங்கையில் இயங்கும் தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பாடசாலைகளின்,

(i) பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) அமைவிட பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) நிருவாகிகள் யாவர் என்பதையும்;

(iv) கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

வெவ்வெறாக அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அரச பாடசாலைகளில் போன்று தனியார் பாடசாலைகளிலும் அதிகளவில் இலங்கையர்களின் பிள்ளைகளே கல்வி கற்கின்றார்கள் என்பதையும்; தனியார் பாடசாலைகளில் அதிக கட்டணங்கள் அறவிடப்படுகின்றதென்பதையும்;

(ii) தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்குதல் மற்றும் நியாயமான கட்டண அறவீடு போன்ற விடயங்களை மேற்பார்வை செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான செயன்முறையொன்று துரிதமாக தயாரிக்கப்பட வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஈ) (i) மேலே (இ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறையை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் மேலும் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

634/ ’16

5.

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யாத ஆட்கள் முறைசார்ந்த ஆட்சேர்ப்பு நடைமுறையின்றி வன்னி மாவட்டத்தின் சமுர்த்தி உத்தியோகத்தர்களாக ஆட்சேர்க்கப்பட்டுள்ளனரென்பதை அறிவாரா;

(ii) அவ்விதமாக தகைமைகளின்றி ஆட்சேர்க்கப்பட்டுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தகவல்கள் யாவை;

(iii) முறைசாரா விதத்தில் நியமிக்கப்பட்டுள்ள ஆட்களை சேவையிலிருந்து அகற்றி முறைசார்ந்த விதத்தில் புதிதாக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு துரித நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

665/ ’16

6.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பலாலி விமான நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கத்துடனோ அல்லது இந்திய கம்பனியொன்றுடனோ உடன்படிக்கையொன்று கைசாத்திட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உடன்படிக்கையை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கான அமைச்சரவையினதும் சட்ட மாஅதிபர் திணைக்களத்தினதும் அங்கீகாரம் அல்லது அவதானிப்புகள் அடங்கிய ஆவனங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்தம் குறிப்பிட்ட கம்பனிக்கு வழங்கப்பட்டிருப்பது பகிரங்க கேள்விப் பத்திர நடைமுறையை பின்பற்றியா என்பதையும்;

(v) ஒப்பந்தத்தின் பிரகாரம் மேற்படி நவீனமயப்படுத்தலுக்கான செலவு எவ்வளவென்பதையும்;

(vi) நவீனமயப்படுத்தும் பணிகளை நிறைவு செய்வதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

720/ ’16

7.

கௌரவ இஷாக் ரஹுமான் ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் கமத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் பெருமளவில் வாழ்கின்றனர் என்பதையும்;

(ii) இப்பிரதேசத்தில் பெரிய மற்றும் சிறிய அளவிலான பல குளங்கள் மறுசீரமைக்கப்படாமல் கைவிடப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) குறிப்பாக 16 பெரிய குளங்களும் 48 சிறிய குளங்களும் துரிதமாக மறுசீரமைக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேலே அ (iii) இல் குறிப்படப்பட்ட குளங்களின் மறுசீரமைப்பு ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

724/ '16

8.

கௌரவ ரஞ்ஜித் த சொய்ஸா,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உடவலவ நீர் வழங்கல் திட்டத்தில், பனஹடுவ மொத்த நீர்த் தாங்கிக்கு அண்மிய பனஹடுவ கிராமத்தின் துணை வீதிகளுக்கு நீர் வழங்கலை பெற்றுக் கொடுக்காது, அதற்கு அண்மித்ததாக பிரதான குழாயொன்றை இடுவதற்கு அரசாங்கம் செலவு செய்துள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(ii) இதன் மூலம் நீர் வழங்கலைப் பெற்றுள்ள பாவனையாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) ஒரு நீர் பாவனையாளருக்காக அரசாங்கம் ஏற்றுள்ள பணத்தொகை அண்ணளவாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீடுகளில்லாத 03 காணித்துண்டுகளுக்காக 850 மீற்றர் தூரத்துக்கு நீர்க் குழாய் இடப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) இந் நீர் வழங்கலை பெற்றுக்கொண்ட பாவனையாளர்களுடன் இரத்தினபுரி பிரதேச முகாமையாளருக்கு ஒரு தனிப்பட்ட தொடர்பு இருக்கின்றதா;

(iii) தனது பதவி அதிகாரத்தைப் பாவித்து இவ்வுத்தியோகத்தர் அரச நிதியை முறையற்றவாறு உபயோகித்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) ஆமெனில், அப் பணத்தொகை யாது;

(v) இத்தொகையை மீள அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

729/ '16

9.

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 இடைக்கால வரவு- செலவுத்திட்டத்தில் "மாளிகை வரி" எனும் புதிய வரி முன்மொழியப்பட்டு, 2016 வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் இது தொடர்ந்தும் வலுப்படுத்தப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) மேற்குறிப்பிட்ட மாளிகை வரியை அறவிடுவதன் அடிப்படை யாது;

(iii) 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் இந்த வரியின் மூலம் அரசாங்கத்துக்கு கிடைத்த மொத்த வரி வருமானம் யாது;

(iv) மேற்படி வருடங்களில் மாளிகை வரியைச் செலுத்தியவர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

779/ '16

10.

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்திலுள்ள மொறவக்க கல்விக் கோட்டத்தில் பாடசாலை ஆசிரியராக முப்பது (30) வருடங்கள் சேவையாற்றி இரண்டு (02) வருடங்களுக்கு முன் ஓய்வுபெற்ற வண. தலுபொத்த உபாலி தேரருக்கு ஓய்வூதியங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் 02/110/6342 எனும் ஓய்வூதிய இலக்கம் வழங்கப்பட்டிருந்ததென்பதையும்;

(ii) வண. தலுபொத்த உபாலி தேரருக்கு உரிய ஓய்வூதியம் இற்றைவரை செலுத்தப்படவில்லையென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) வண. தலுபொத்த உபாலி தேரருக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மேலும் காலதாமதமின்றி செலுத்துவதற்கு அவர் ஓய்வூதியங்கள் பணிப்பாளர் நாயகத்திற்குப் பணிப்புரை வழங்குவாரா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

784/ '16

11.

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கம்பஹா மாவட்டத்தில் பூக்கள் மற்றும் அலங்கார இலைகள் சார்ந்த கைத்தொழிலில் ஈடுபடுகின்ற ஏறக்குறைய 5000 பேர் இருக்கிறார்கள் என்பதையும், ஏறக்குறைய 28 சங்கங்கள் இயங்கிவருகின்ற இக்கைத்தொழிலுக்கு கடந்த அரசாங்கம் ஊக்குவிப்புகளை வழங்கியதென்பதையும் அவர் அறிவாரா?

(ஆ) (i) கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பில் பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தொகை மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், பிரதேச செயலாளர் பிரிவுக்கிணங்க ஓகிட், அந்தூரியம் மற்றும் அலங்கார இலைகளின் செய்கையாளர்கள், சந்தைப்படுத்துனர்கள், சிறிய நடுத்தர அளவிலான மற்றும் பாரிய அளவிலான செய்கையாளர்கள் மற்றும் பூக்களின் ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முதல் காலாண்டில் (அ) இல் குறிப்பிட்ட ஆட்களை ஊக்குவிக்கவும் தொழில்முயற்சியில் தக்கவைத்துக்கொள்ளவும் புதியவர்களை தொழில்முயற்சிகளில் இணைத்துக்கொள்வதற்கும் மேற்கொண்ட நடவடிக்கைகள், வழங்கிய நிவாரணங்கள், அதற்காக ஒதுக்கிய பணத்தொகை மற்றும் நன்மைபெறுனர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) கடந்த அரசாங்கத்தினால் களணிய பல்கலைகழகத்தினூடாக கம்பஹா தாவரவியல் பூங்காவில் ரூபா 22 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இழையச்செய்கை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள், உருவாக்கப்பட்டுள்ள மலர் வகைகள், நாற்றுகள் வழங்கப்பட்ட மலர் தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

790/ ‘16

12.

கௌரவ விதுற விக்கிரமநாயக்க,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ராஜகிரியவில் அமைந்துள்ள விக்டோரியா இல்லம் 14 வாட்டுகளை கொண்டுள்ளதோடு குணப்படுத்த முடியாத 153 ஊனமுற்றவர்கள் தங்கியுள்ளனரென்பதையும்;

(ii) மேற்படி இல்லத்தில் தங்கியுள்ளவர்களின் அனைத்து பணிகளுக்காக மற்றும் நீர், மின்சாரம், ஊழியர் சம்பளம் உட்பட நிர்வாக செலவுகளுக்காக அரசாங்கம் வருடாந்தம் சுமார் ரூபா 08 மில்லியன் தொகையை பெற்றுக் கொடுக்கின்றதென்பதையும்;

(iii) மேற்படி தொகை அப் பணிகளுக்கு போதுமானதல்ல என்பதையும்;

(iv) ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளம் போதியதாயில்லாமையினால் புதிதாக ஊழியர்களை ஆட்சேர்க்க முடியாதுள்ளதன் மூலம் பணியாட்டொகுதியினரும் போதுமான அளவில் இல்லையென்பதையும்;

(v) பணியாட்டொகுதியினருக்கு போதிய அளவு உத்தியோகபூர்வ விடுதி வசதிகள் இல்லாமை மற்றும் போதியளவு சம்பளம் கிடைக்காமையினால் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்களிடமிருந்து சிறந்த சேவையினை பெற்றுக்கொள்வது பிரச்சினையாக உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போதுள்ள ஊழியர்களிடமிருந்து ஆகக்கூடிய சேவையை பெற்றுக் கொள்வதற்காக அவர்களது சம்பளத்தை அதிகரிக்கவும் வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) புதிதாக ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

791/ ’16

13.

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலக இஸ்லாமிய இராச்சியத்திற்காக பயங்கரவாதத்தை விதைக்கின்ற ISIS அமைப்பில் இலங்கையரும் இணைந்துள்ளனர் என்பது உண்மையா என்பதையும்;

(ii) ஆமெனில், தற்போது ISIS பயங்கரவாதத்திற்கு போராடுவதாக வெளிவந்துள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வாறு போராடும் போது இறந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ள ஆட்கள் உள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களது பெயர்கள் மற்றும் அவர்கள் இறந்துள்ள நாடுகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ISIS அமைப்பின் விஸ்தரிப்பு தொடர்பாக தயாரித்துள்ள திட்டங்களின் பிரகாரம் 2020 இல் இலங்கையும் அவர்களின் போர்க்களமாக தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது உண்மையா என்பதையும்;

(ii) அரச புலனாய்வுப் பிரிவினால் தற்போது ISIS பயங்கரவாதம் இலங்கையினுள் பரவுவதை தடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஆலோசனைகளை செயற்படுத்துவதில் தடைகள் உள்ளனவா என்பதையும்,

(iv) இலங்கையில் ஏதேனும் அரசியல் கட்சி அல்லது அமைப்பு அல்லது அரச சார்பற்ற அமைப்பு ISIS அமைப்புடன் தொடர்ப்பு வைத்திருக்கின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

799/ '16

14.

கௌரவ சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கல்வி நிருவாக சேவை (SLEAS), இலங்கை நிருவாக சேவை (SLAS) போன்ற சேவைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் கொழும்பில் மட்டுமே நடத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி பரீட்சைகள் கொழும்பிலுள்ள பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படுவதன் மூலம் தூரப் பிரதேசங்களிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) விண்ணப்பதாரர்கள் எதிர்நோக்க நேரிடுகின்ற சிக்கல்கள் தொடர்பாக கவனம் செலுத்தி, எதிர் காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான பரீட்சைகளை நடாத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறாக, 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் (அத்தியாயம் 131) 39 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2016.07.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2016 யூன் 22 ஆந் திகதிய 1972/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை மூலம் சிங்கள மற்றும் தமிழ்மொழி பிரதிகளில் அச்சுப் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட, மோட்டார் வாகனச் சட்டத்தின் (203 ஆவது அத்தியாயமான) 122 ஆம் பிரிவு மற்றும் VII அ பகுதியுடன் சேர்த்து வாசிக்கப்படும், குறித்த சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச்சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 நவெம்பர் 02 ஆம் திகதிய 1939/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் இணைக்கப்பட்டுள்ளது)

* 3.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 22 ஆந் திகதிய 1946/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

சட்ட ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்,— காணி கொள்ளுதல் சட்டத்தின் கீழ் கட்டளை,— (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதல் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) ஆம் அத்தியாயத்தின் 2013 காணி கொள்ளல் சட்டத்தின் (நட்டஈடு செலுத்துதல்) ஒழுங்குவிதிகளின் திருத்தம் தொடர்பில் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூலை 26 ஆம் திகதிய 1977/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 மே 26 ஆம் திகதிய 1968/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 13 ஆம் திகதிய 1971/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 13 ஆம் திகதிய 1971/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 28 ஆம் திகதிய 1973/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூலை 12 ஆம் திகதிய 1975/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவீனத் தலைப்பு 147, நிகழ்ச்சித்திட்டம் 01,— † செயற்பாட்டு நடவடிக்கைகள் 2016 ஜனவரி 01 ஆம் திகதியுடன் ஆரம்பித்து 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதி ஆண்டின் பயன்பாட்டுக்காக இலங்கையின் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் ஏற்கனவே அங்கீகரித்துள்ள செலவின எல்லைகளை விஞ்சாத வகையில் அதன் பலதரப்பட்ட செலவீன தலைப்புக்களின் கீழ் எதிர்பார்த்த சேமிப்புக்களை தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் செலவீனத் தலைப்பு "வரவுசெலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் அவசர நிலைமைகள் செயற்திட்டத்திற்கு" மாற்றிக் கொள்வதற்கும் 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க வரவுசெலவுதிட்ட வகுத்திட்டுச் சட்டத்தின் 6.1 மற்றும் 6.2 ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு இனங்காணப்பட்ட வெளிநாட்டு நிதியளிப்புடன் செயற்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி குறைநிரப்பு நிதி ஏற்பாடாக உரிய அமைச்சுக்களுக்கு மாற்றுவதற்கு இயலும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசுக்குச் சொந்தமான வேறு ஏதேனுமொரு நிதியத்திலிருந்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பின் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தினால் நிதியளிப்பு செய்யப்பட்ட ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் (ரூ. 592,925,000) தொகையினை விஞ்சாத தொகையொன்றை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமென பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்துள்ளார்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| தலைப்பு:- | | 147 - பிரதேச அபிவிருத்தி அமைச்சு |
| நிகழ்ச்சித்திட்டம்:- | | 1 - செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் |
| மீண்டெழும் செலவீனம் | - | ரூ. 469,425,000 |
| மூலதனச் செலவீனம் | - | ரூ. 123,500,000 |
| மொத்தச் செலவீனம் | - | ரூ. 592,925,000 |

(ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் மாத்திரம்)

**அரச அலுவலர்களுக்கான முற்பண "பீ" கணக்கு**

| | |
|---|---|
| உச்ச செலவீன எல்லை ( உச்ச வரவு எல்லை) | – ரூ 2,000,000 |
| குறைந்த கிடைப்பனவு எல்லை (குறைந்த செலவு எல்லை) | - ரூ. 150,000 |
| உச்ச வரவு நிலுவை எல்லை | - ரூ. 3,500,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2016 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 55,000,000.

* 16.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைத்தல்,— 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (1) ஆவது உறுப்புரையின் பிரகாரம், ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு அந்த ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும், அப்பதவியை வகிப்பவருக்கு பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும்;

ஆபத்தை ஏற்க வேண்டிய பதவியான இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2015.02.12 ஆம் திகதி அரசாங்கத்தின் தேவையின் அடிப்படையில் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவியை வகித்த சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவை நியமனம் செய்ததன் அடிப்படையில், அவருக்கு தனிப்பட்ட வகையில் அமையுமாறு கீழ் குறிப்பிடப்படும் சம்பளம் மற்றும் படிகளை 2015.02.12 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாலும்;

அ. மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவிக்குரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் சகல கொடுப்பனவுகள் (தொலைபேசி கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் வீட்டு வாடகைக் கொடுப்பனவு தவிர்ந்த); அத்துடன்

ஆ. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்குரித்தான அமைச்சின் செயலாளருக்கான கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்படவில்லையாயின் வீட்டு வாடகைக் கொடுப்பனவு.

அதற்கமைவாக, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவிற்கு அரச திரட்டு நிதியத்திலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள்,— பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 41 (ஆ) உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் எனைய கொடுப்பனவுகளை, குறிப்பிட்ட ஆணைக் குழுக்கள் உண்மையிலேயே அலுவல்களை ஆரம்பித்த திகதியினை மேற்குறிப்பிடப்பட்ட செலுத்துகைகள் அமுலாக்கப்படும் திகதியாகக் கருதி செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாலும்:-

(அ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் தலைவர்கள் தவிர ஏனைய தலைவர்களுக்கு ரூபா. 100,000/- மாதாந்தக் கொடுப்பனவவையும், ரூபா.10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கு உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஆ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுத் தலைவர்களுக்கு தமது நிரந்தரப் பதவிக்குரிய சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக, சுயாதீன ஆணைக்குழுத் தலைவர் ஒருவரின் மாதாந்தக் கொடுப்பனவின் 50% ஐ மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்காகவும்;

(இ) இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழு தவிர ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்குப் பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படாத உறுப்பினர்களுக்கு ரூபா 75,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தான் வசிக்கும் இடத்திலிருந்து ஆணைக்குழு அலுவலகத்திற்குச் செல்வதற்கான தூரத்தின் அடிப்படையில் 350 கிலோ மீட்டர்கள் வரை ரூபா 25,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது 350 கிலோ மீட்டர்களிலும் அதிகளவு தூரத்திற்கு ரூபா 50,000/- போக்குவரத்துக் கொடுப்பனவையும் செலுத்துவதற்காகவும்;

(ஈ) 2015.06.17 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க வர்த்தக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவருக்கு ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ரூபா 10,000/- கொடுப்பனவைச் செலுத்துவதற்காகவும்;

(உ) 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் (8) ஆம் உறுப்புரைக்கமைய அந்த ஆணைக்குழுவின் தலைவருக்கு இணையான வகையில் உறுப்பினர்களுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ரூபா 95,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கும் உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 170 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஊ) தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தேர்தல் ஒன்றுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதி முதல் பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதி வரையிலான காலப் பகுதிக்காக அவர்களது மாதாந்தக் கொடுப்பனவின் ¾ விசேட கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்; மற்றும்

அதற்கமைய, அரசியல் யாப்பின் 41 (அ) சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்தவேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் இணைக்கப்பட்டுள்ளது)

* 18.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 19.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

22.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.